<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

**<u>MCOP. No.75/2024</u>**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அகாசி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். குன்னம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.168/2023ல் பிறப்பித்த தீர்ப்புரையின் நகல் எ.ம.சா.ஆ.1,

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்து சம்மந்தமாக முதல்தகவல்அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை என்மீது தான் காவல்துறையால் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தில் நான் ஓட்டிசென்ற வாகனம் ஈடுபடவில்லை என்று நானோ என்னுடைய மேல்அதிகாரியோ உரிய சட்டநடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மோட்டார்வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு நான் தான் பேருந்தை எடுத்து சென்றேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்து 5நாட்கள் கழித்து பேருந்தை மோட்டார்வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு எடுத்து சென்றேன். சம்பவதேதியில் பேருந்தை நான் சென்னைக்கு ஓட்டிசென்றேன். குற்றவியல் வழக்கில் மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கையில் என்னுடைய பேருந்தின் சேதாராம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக எங்கள் நிர்வாக அலுவலகத்தில் கோப்பு உள்ளது. அந்த கோப்பை பார்த்தால் என்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற

விவரம் தெரியுமென்றால் அதன்பிறகு எனக்கு Duty தரவில்லை. எனக்கு சம்பளம் பிடித்தம் செய்தார்கள் என்றால் அப்போது நான் நிரந்தர பணி இல்லை. ஒப்பந்த பணியில் வெளியில் இருந்து வேலைசெய்தேன். சம்பவதேதியில் நடத்துனராக இருந்தவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. அன்று பயணிகள் பேருந்தில் இருந்தார்கள். கவனக்குறைவு குறித்து சந்தேகத்தின் அடிப்படையில் நான் விடுதலை செய்யப்பட்ட தீர்ப்பானது இந்த வழக்கில் மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சம்பவநடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் திருமாந்துறை டோல்கேட்டிற்கும் இடையே 5 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் சம்பவம் நடந்த இடம் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வாகனம் விபத்தில் ஈடுபட்டதாக CCTV பதிவுகள் மூலம் காவல்துறையினர் தெரிந்துகொண்டார்கள் என்றால் அப்படி சொன்னார்கள். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்யவில்லை. 2பேர்கள் இறப்பிற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றும், விபத்தை ஏற்படுத்தி விட்டு நான் நிற்காமல் வாகனத்தை ஓட்டிசென்றேன் என்றும், வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை என்று நிர்வாகத்திற்கு பொய்யாக தகவல் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் என்னிடம் பிணைக்காக கையெழுத்து வாங்கவில்லை. நான் ஓட்டிசென்ற பேருந்து காவல்நிலையம் வந்தபின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அப்போது தயாரித்த கடிதத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கிகொண்டார்கள். எங்கள் நிர்வாகத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.